**Most Rev.Vincent Mar Paulos**
**Bishop of Marthandam**

Bishop's House
Marthandam
K.K.Dist – 629 165

Cir.No.3/2025

01.04.2025

# CIRCULAR

ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்களும் வணக்கங்களும்.

கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே/ அருட் சகோதரர்களே அருட்கன்னியர்களே/ இறைமக்களே,

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவிற்கு தயாராகும் இத்தருணத்தில் நமது மறைமாவட்டத்தின் முதல் ஆயராகிய மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு திருநாளை இந்த மாதம் 7,8 தினங்களில் கொண்டாடுகின்றோம். அவரது வாழ்வும் பணியும் திருச்சபைக்கும் சமூகத்திற்கும் ஒரு உந்து சக்தியாக அமைந்துள்ளது. அவரது நினைவு திருநாளில் அவரது படிப்பினைகளை உள்வாங்கி வாழ்க்கை பாடத்தை கற்றறிந்து அதிலிருந்து தூண்டுதல் பெற்று நமது வாழ்க்கை பயணத்தை தொடர்வோம். அவரது ஆன்மீக வாழ்வு இன்றைய தலைமுறைக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது. அவரது மறைதூதுப் பணி தாகம் கிறிஸ்துவின் அன்பையும், மீட்பையும் புதிய மறைபரப்பு தளங்களுக்கு எடுத்து செல்ல நம்மை அழைக்கிறது. அவரது ஆரோக்கிய பார்வை புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் துன்புறும் மனிதருக்கு உதவிட அழைக்கிறது. இன்று நிலவி வரும் போதை கலாசாரத்தில் போதையற்ற ஒரு வாழ்விற்கு அவரது வாழ்வு நம்மை தூண்டுகிறது. கைவிடப்பட்ட நிலையிலிருக்கும் முதியோர்களையும், பிள்ளைகளையும், இளையோர்களையும் கரம்கொடுத்து மனித நேய மாண்பு காக்க அவர் செய்த அன்பு பணிகள் நம்மை அழைக்கிறது. கிறிஸ்தவ நம்பிக்கையை சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கு எடுத்துச் செல்ல அவர் காட்டிய துணிவு அவர் ஆண்டவர் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துகிறது. இறையியலையும் சமூக பிரச்சனைகளையும் ஆழ்மனதியானத்திற்கு உட்படுத்தி திருச்சபைக்கு பணிவும் சமூக சீர்திருத்தத்தில் துணிவும் காட்டினார். அவரது அர்ப்பண வாழ்வு மற்றும் போதனைகள்

இன்றைய சமூகத்திற்கு ஆன்மீக வழிகாட்டுதலை தருகிறது. அவருடைய நினைவு திருநாள் அவர் வாழ்ந்து காட்டிய மதிப்பீடுகளை நம் உள்ளங்களில் தூண்டி எழுப்புகிறது. அவர் ஊக்குவித்த பிறரன்பு பணிகளும், சமூக நல்லிணக்க முயற்சிகளும், திருச்சபையில் அவர் மேற்கொண்ட முயற்சிகளும் நம் உள்ளங்களில் அவருக்கு நீங்க இடத்தை தந்திருக்கிறது. அவருடைய நினைவுக்கு முன் தலைவணங்கி அஞ்சலி செலுத்துவோம்.

நம் பேராலயத்தில் அமைந்திருக்கும் அவரது கல்லறைக்கு பாதையாத்திரையாக வந்து அஞ்சலி செலுத்தி அவரது ஜெப உதவியையும் நாடுவோம். விடுதலை பயண தொடக்கத்தில் குறிப்பாக பாலைநில பயணத்தில் யோசேப்பின் எலும்புகளை மோசே தம்மோடு எடுத்து சென்றார். பகலில் மேக தூணும் இரவில் நெருப்பு தூணும் வாயிலாக கடவுள் இஸ்ராயேல் மக்களை வழிநடத்தினார். "ஏனெனில் கடவுள் உங்களை சந்திக்கும் போது இங்கிருந்து என் எலும்புகளை எடுத்துச் செல்லுங்கள் என்று யோசேப்பு இஸ்ராயேல் மக்களிடம் கூறினார்" (விப 13:19). எதிர்நோக்கின் திருப்பயணிகளாக வாழ்க்கை பயணத்தை தொடரும் நாம் கடவுளின் அன்பிரக்கத்தையும் அருளையும் அனுபவமாக்கிக் கொண்டிருக்கின்றோம். மேதகு ஆயர் அவர்களின் கல்லறை அவர் நம்முடன் இருந்து நமக்காக இறைவனிடம் மன்றாடுகின்றார் என்பதை நினைவூட்டுகிறது. அவரது பரிந்துரை நமக்கு அரணாகவும் கோட்டையாகவும் இருக்கட்டும். அவரது நினைவு அனைவருக்கும் ஆசீராக மாறட்டும். ஏப்ரல் 7-ஆம் தியதி நடைபெறும் பாதயாத்திரையிலும், 8-ஆம் தியதி நடைபெறும் நினைவு திருப்பலியிலும் அனைவரும் கலந்து கொண்டு இறையாசீர் பெற்று செல்ல அனைவரையும் அழைக்கின்றேன்.

## நிகழ்வன

### 07-04-2025 திங்கள்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணி | : | காலை ஜெபம், திருப்பலி<br>மார் எஃப்ரேம் நகர் (வெள்ளெலும்பு ஆலயம்) |
| காலை 9.30 மணி | : | தூப மன்றாட்டு - பின்குளம் |
| காலை 9.45 மணி | : | பாதையாத்திரை ஆரம்பம் |
| காலை 10.15 மணி | : | குழிஞ்ஞான்விளை |

காலை 10.30 மணி : ஊரம்பு
காலை 10.45 மணி : சூழால்
காலை 11.00 மணி : புஷ்பகிரி சந்திப்பு
காலை 11.15 மணி : அம்பிலிகோணம்
காலை 11.30 மணி : அடைக்காகுழி சந்திப்பு
நண்பகல் 12.00 மணி: செறுவாரக்கோணம்
நண்பகல் 12.30 மணி: களியக்காவிளை
பிற்பகல் 12.45 மணி : படந்தாலுமூடு
பிற்பகல் 01.15 மணி : குழித்துறை மார் எஃப்ரேம் வளாகம் (மதிய உணவு)
மாலை 04.15 மணி : பாதையாத்திரை தொடர்தல்
மாலை 04.30 மணி : வெட்டுமணி
மாலை 05.00 மணி : பேராலயம் (ஆயரின் நினைவிடம் சென்றடைதல்) மாலை ஜெபம், தூப மன்றாட்டு
தலைமை : மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்

## 08-04-2025 செவ்வாய்கிழமை

காலை 6.30 மணி : காலை ஜெபம்
காலை 7.00 மணி : நினைவுத் திருப்பலி
: பொதுக்கூட்டம்
: தூப மன்றாட்டு

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

அன்புடன்

† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்
மார்த்தாண்டம் மறைமாவட்டம்.

**குறிப்பு: இந்த சுற்றறிக்கையை வரும் ஞாயிற்றுக்கிழமை நமது ஆலயங்களில் திருப்பலியின் மத்தியில் வாசிக்கவும்.**